பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

03 11 2024 **SUNDAY** 12 40 **PM**

தலைப்புச் செய்திகள்

1. ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவை தேர்தலுக்கான பிஜேபி தேர்தல் அறிக்கையை அக்கட்சியின் மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா இன்று வெளியிட்டார்.

2. பல்லுயிர் பெருக்கத்தை காக்கும் வகையில் இந்தியா தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மத்திய சுற்றுச்சூழல் துறை இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

3. மத்திய காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 42 பேர் உயிரிழந்ததாக பாலஸ்தீன அரசு தெரிவித்துள்ளது.

4. தமிழகம், புதுச்சேரி, காரைக்கால், கேரளா, மாஹேவின் சில பகுதிகளில் இன்றும் நாளையும் இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. **Costa North Coast** ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Anahat Singh** பட்டம் வென்றார்.

**>>>><<<<**

ஏழைகளின் நலனுக்காக செயல்படும் அரசை ஜார்க்கண்ட் மாநில மக்கள் எதிர்நோக்குவதாக பிஜேபி மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார். ராஞ்சியில் இன்று அவர், அம்மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிஜேபியின் தேர்தல் அறிக்கையை இன்று அவர் வெளியிட்டு பேசினார்.

முந்தைய திரு. ஹேமந்த் சோரன் தலைமையிலான அரசு, பெண்களை பாதுகாக்க தவறியதாக அவர் குற்றம் சாட்டினார். ஜார்க்கண்ட் மாநிலத்தின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பை கருத்தில் கொண்டு இந்த தேர்தல் அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளதாக திரு. அமித் ஷா தெரிவித்தார்.

முன்னதாக இன்று காலை அம்மாநில பிஜேபி தலைவர்களுடன் தேர்தல் ஆயத்தப் பணிகள் குறித்து அவர் ஆய்வு மேற்கொண்டார்.

**Dhalbhumgarh, Barkata, Simaria** ஆகிய இடங்களில் திரு. அமித் ஷா இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

**>>>><<<<**

கேரளாவின் வயநாட்டில் நடைபெற்ற காங்கிரஸ் பிரச்சாரக் கூட்டத்தில் அக்கட்சியின் மூத்த தலைவரும், அத்தொகுதியின் முன்னாள் மக்களவை உறுப்பினருமான திரு. ராகுல் காந்தி இன்று பங்கேற்றார்.

அத்தொகுதியில் போட்டியிடும் திருமதி. பிரியங்கா காந்தியை ஆதரித்து அவர் பிரச்சாரம் மேற்கொண்டார்.

இத்தொகுதியில் அண்மையில் வென்ற, திரு. ராகுல் காந்தி தனது எம்.பி. பதவியை ராஜினாமா செய்ததை அடுத்து அங்கு இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

>>>><<<<

பல்லுயிர் பெருக்கத்தை காக்கும் வகையில் இந்தியா தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மத்திய சுற்றுச்சூழல் துறை இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

கொலம்பியாவில் நடைபெற்ற சர்வதேச சுற்றுச்சூழல் மாநாட்டில் இந்தியாவின் புதுப்பிக்கப்பட்ட தேசிய பல்லுயிர் பெருக்க செயல்பாட்டு திட்டத்தினை அவர் வெளியிட்டு பேசினார். அரசும், சமூகமும் முழுமையாக செயலாற்றும் வகையில் இந்த செயல் திட்டம் அமைக்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

சூழல் அமைப்பு சீரழிவை தடுப்பது, ஈரநிலங்களை பாதுகாப்பது, கடல் மற்றும் கடலோரப் பகுதிகளை சீரமைப்பது உள்ளிட்டவற்றில் புதுப்பிக்கப்பட்ட பல்லுயிர் பெருக்க செயல்திட்டம் கவனம் செலுத்தும் என்று அமைச்சர் தெரிவித்தார். 2030ஆம் ஆண்டுக்குள் பல்லுயிர் பெருக்க இழப்பை தடுத்து நிறுத்தும் வகையில் இந்த செயல் திட்டம் அமையும் என்று திரு. கீர்த்தி வர்தன் சிங் நம்பிக்கை தெரிவித்தார்.

>>>><<<<

சகோதர – சகோதரிகளின் உறவை சிறப்பிக்கும் வகையில் இன்று **Bhai Dooj** கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் இடையிலான பாசப்பிணைப்பு மேலும் வலுப்படும் வகையில், இந்த பண்டிகை அமையும் என்று தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், அனைவரது வாழ்விலும் அன்பும், அளவற்ற மகிழ்ச்சியும் பெருக வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

>>>><<<<

சத்திஷ்கர் மாநிலம், சுக்மா மாவட்டத்தில் மாவோயிஸ்ட்கள் நடத்திய தாக்குதலில் இரண்டு காவலர்கள் காயமடைந்தனர்.

**Jagargunda**-வில் நடைபெற்ற வாரச்சந்தையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டபோது காவலர்கள் மீது மாவோயிஸ்ட்கள் தாக்குதல் நடத்தியதாகவும், முதலுதவி சிகிச்சைக்குப் பின்னர் அவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, மாவோயிஸ்ட்களை தேடும் பணி நடைபெறுவதாக அம்மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.

>>>><<<<

தில்லியில் இன்று காலை காற்று தரக் குறியீடு 361-ஆக பதிவானதாக மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

காற்று மாசுபாட்டை குறைக்கும் வகையில், தில்லியில் தீபாவளியை ஒட்டி பட்டாசுகள் வெடிக்க தடை விதிக்கப்பட்டபோதும், கடந்த இரண்டு நாட்களாக காற்றின் தரம் வெகுவாக குறைந்திருப்பதாக அந்த வாரியம் தெரிவித்துள்ளது.

தில்லியின் சில பகுதிகளில் காற்று தர குறியீட்டு எண் 400-ஐ எட்டியிருப்பதாக அது கூறியுள்ளது.

இதற்கிடையே, தில்லி மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு இரவு மற்றும் காலை வேளைகளில் பனிமூட்டம் மற்றும் புகை காணப்படும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>><<<<

காஸாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 42 பேர் உயிரிழந் ததாக பாலஸ்தீன அரசு தெரிவித்துள்ளது.

மத்திய காஸா பகுதியில் அமைந்துள்ள அகதிகள் முகாம் மீது கடந்த வெள்ளிக்கிழமை முதல், விமானம் மற்றும் பீரங்கி மூலமாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இதில் 150க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் பாலஸ்தீன பாதுகாப்புப் படை கூறியுள்ளது.

குழந்தைகள் மற்றும் பெண்கள் உட்பட பொதுமக்களை குறிவைத்து நடத்தப்படும் இந்த தாக்குதலுக்கு சர்வதேச சமூகம் கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்று காஸாவிலிருந்து வெளியிடப்பட்டுள்ள அரசு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>><<<<

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால், கேரளா, மாஹேவின் சில பகுதிகளில் இன்றும் நாளையும் இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஒரு சில பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

தமிழகத்தில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, ஒகேனக்கல் காவிரியாற்றில் தண்ணீர் வரத்து இன்று காலை நிலவரப்படி, வினாடிக்கு 14 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மேலும், சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் இன்று காலை நீர்வரத்து 6 ஆயிரத்து 712 கனஅடியிலிருந்து 9 ஆயிரத்து 917 கனஅடியாக அதிகரித்துள்ளது.

ஈரோடு மாவட்ட நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து வருவதன் காரணமாக, பவானிசாகர் அணைக்கு வரும் நீர்வரத்து 13 ஆயிரத்து 982 கனஅடியாக அதிகரித்துள்ளது.

இன்று காலை நிலவரப்படி அந்த அணையின் நீர்மட்டம் 92 புள்ளி ஒன்று ஏழு அடியாக இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தேனி மாவட்டத்தில் மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்து வரும் மழை காரணமாக, கும்பக்கரை அருவி மற்றும் வராக நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால், வராக நதிக் கரையோரத்தில் வசிக்கும் மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வடகிழக்கு பருவமழையின் காரணமாக விருதுநகர் மாவட்டத்தில் உள்ள நீர்நிலைகள் முழுமையாக நிரம்ப வாய்ப்புள்ளதாகவும், மழையினால் மிகவும் பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளில் பாதுகாப்பு மையங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அம்மாவட்ட ஆட்சியர் திரு. ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

மேலும், நீர்நிலைகளில் குளிப்பதற்கோ அல்லது வேடிக்கை பார்ப்பதற்கோ குழந்தைகளை அனுப்ப வேண்டாம் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**>>>><<<<**

**Costa North Coast** ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Anahat Singh** பட்டம் வென்றார். ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் இறுதியாட்டத்தில் அவர் 11-6, 11-6, 11-6 என்ற செட்கணக்கில் ஜப்பானின் **Akari Midorikawa**-வை தோற்கடித்தார்.

**>>>><<<<**

மும்பையில் நடைபெற்று வரும் நியூஸிலாந்துக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாளான இன்று சற்றுமுன்வரை இந்தியா 7 விக்கெட் இழப்புக்கு 108 ரன் எடுத்துள்ளது.

நேற்று தனது இரண்டாவது இன்னிங்சில் 9 விக்கெட் இழப்பிற்கு 171 ரன் எடுத்திருந்த நியூஸிலாந்து அணி இன்று தொடர்ந்து ஆடி, 174 ரன்னுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இதையடுத்து, 147 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு இந்தியா பேட் செய்து வருகிறது.

இந்தியா முதல் இன்னிங்ஸில் 263 ரன்னும், நியூஸிலாந்து முதல் இன்னிங்ஸில் 235 ரன்னும் எடுத்துள்ளன.

**>>>><<<<**

அமெரிக்காவின் **Colorado-**வில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியா 4 தங்கம், 8 வெள்ளி, 5 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

**>>>><<<<**

**Congo-**வில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் கரண்சிங் - பிரான்ஸின் **Florent Bax** இணை பட்டம் வென்றது.

**>>>><<<<**

ஆஸ்திரேலியாவின் **Mackay** நகரில் நடைபெற்ற இந்தியா-ஏ அணிக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், ஆஸ்திரேலியா-ஏ அணி ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

**>>>>END<<<<**